**சாட்சிய வாக்குமூலம்**

**மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.**

முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 124/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 10 (LW– 19) | நாள் | 12.03.2026 |
| பெயர் | டாக்டர். பத்மராஜன் | | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | | |
| தாலுக்கா | | வயது | |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். அவர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சிதம்பரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 14.01.2018 அன்று மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனயில் உதவி மருத்துவராக அன்றைய தினம் பணியிலிருந்தபோது இறந்துபோன நான்கு நபர்கள் கண்ணன், 60 வயது, சரண்யா 27 வயது, குணசுந்தரி 55 வயது, சுகன்யா 25 வயது ஆகியோரின் பிரேத பரிசோதனைக்கான வேண்டுகேளை காவல் துணைக்காணிப்பாளரிடமிருந்து மதியம் 12.00 மணியளவில் சிறப்பு உதவி ஆய்வாளர் குணசேகரன், பாலக்கிருஷ்ணன், பெண்காவலர் சங்கீதா, ஆகியோர் மூலம் பெற்றுக்கொண்டேன்.

இறந்துபோன சரன்யா என்பவரின் பிரேத்தை சடலக்கூறாய்விற்கு மயிலாடுதுறை கோட்டாட்சியர் அவர்கள் அனுப்பி வைத்தார் சரண்யாவின் சடலத்தை உடற்கூறாய்வு ஆய்விற்கு தலைமை மருத்துவர் அதிகாரி என்பவர் என்னையும், டாக்டர் சவிதா என்ற பெண் மருத்துவரையும் நியமித்தார். அதன்படி சவக்கிடங்கில் இறந்துபோன கண்ணன், சரண்யா,

குணசுந்தரி மற்றும் சுகன்யா ஆகியோரின் பிரேதங்களை தலைமைக்காவலர் குணசேகரன், பாலக்கிருஷ்ணன், சங்கீதா ஆகியோர் அடையாளம் காட்டினார்கள். மருத்துவர் சபிதா என்னுடன் இருந்தார். நான், கண்ணன், குணசுந்தரி, சரண்யா, சுகன்யா ஆகியோரின் பிரேதங்களை மதியம் 12.30 மணிக்கு பார்வையிட்டு பிரேத பரிசோதனையை தொடங்கினோம். நான்கு பிரேதங்களையும் தனித்தனியாக பிரேத பரிசோதனை செய்து குறிப்புகள் எடுத்துகொண்டோம், மருத்துவர் சபிதா சரண்யாவின் பிரேதத்தை பரிசோதனை செய்து அவர் குறிப்பு எடுத்து கொண்டார். நான்கு பிரேதத்தையும் உடல் உள்ளுறுப்புகள், தலை, கழுத்து, கல்லீரல், வயிறு, குடல் பகுதி மற்றும் சிறுநீரகம் ஆகியவற்றை ஆய்வு செய்து பதிவேட்டில் குறித்து கொண்டோம். நான்கு பிரேதங்களிலும் கழுத்து எலும்புகள் உடையவில்லை. நான்கு பிரேதங்களிலும் பிரேத பரிசோதனையின் போது தனித்தனியாக உடல் உள்ளுறுப்புகள் மற்றும் கழுத்திலிருந்த கன்னிய காயம், காயம் இருந்த இடத்தின் தோல் ஆகியவற்றை சேகரம் செய்தோம். சுகன்யாவின் பிரேதத்திலிருந்த பெண்ணுறுப்பிலிருந்து Vaginal Swab ஆய்விற்காக அனுப்பப்பட்டது. பிரேத பரிசோதனை மாலை 5.00 மணிக்கு முடித்து பிரேதங்களை காவலர்களிடம் ஒப்படைத்தோம். சேகரம் செய்யப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை பகுப்பாய்விற்காக மேற்படி காவலர்கள் மூலம் 28.02.2018 அன்று தஞ்சாவூர் பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பினோம். சுகன்யாவின் பிரேத்தில் சேகரம் செய்த Vaginal Swab மற்றும் நான்கு பிரேதங்களிலும் சேகரிக்கப்பட்ட தோல் ஆகியவற்றை 15.03.2018 அன்று மேற்படி காவலர்கள் மூலம் தஞ்சாவூர் பகுப்பாய்வு கூடம் Pathalogy துறைக்கு அனுப்பினோம். பிறகு அதன் முடிவுகள் பெறப்பட்டு அந்த அறிக்கையில் இறந்துபோன கண்ணன், சரண்யா, குணசுந்தரி,

சுகன்யா ஆகியோரின் இறப்பானது தூக்கு மாட்டியதால் ஏற்பட்ட மூச்சு திணறல் காரணமாக அவர்கள் இறந்திருக்கலாம் என்று சான்று வழங்கினோம். அந்த **பிரேத பரிசேதனை சான்றுகள் அசாஆ 5 முதல் 8** ஆகும். இறந்துபோன சுகன்யாவின் இடது பக்க தலையின் வெளிப்பக்கத்தில் 10x5 செமீ அளவில் இரத்தக்கட்டு இருந்தது. இது சம்பந்தமாக என்னை காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் ஏற்கனவே வழக்கறிஞர் திரு. ஸ்ரீதரன் அவர்கள் முன்னிலையாகிவந்த நிலையில் இன்று குற்றம் சாட்டப்பட்ட நபர் முன்னிலையாகி எழுத்துபூர்வமாக ஒரு வேண்கோள் கொடுத்து அதன்படி தன்னுடைய வழக்கறிஞர் முன்னிலையாக மாட்டார் என்றும் தனக்கு மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு மூலமாக எந்த வழக்கறிஞரும் நியமித்து தர வேண்டாம் என்றும் தானே தன்னுடைய வழக்கை நடத்தி கொள்வதாகவும் தான் முதுகலை புள்ளியல் படித்தவர் என்றும் தன் வழக்கை நடந்த அனுமதியும் கேட்டார், எனவே குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

இறந்து போன நபர்களின் உடல்கள் எப்போது மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தன என்ற நேரம் எனக்கு சரியாக தெரியாது. சடலங்கள் குளிர்பதன அறைக்கு வெளியில் தான் இருந்தன. விபத்து பதிவேடுகளில் குறிப்பு எதுவும் எழுதப்படவில்லை காரணம் சடலங்களாத்தான் மருத்துவமனைக்கு வந்தன. இறந்த உடலில் ஆறு மணிநேரத்திற்கு பிறகு விறைப்பு தன்மை ஏற்பட தொடங்கி 48 மணி நேரம் வரை நீடித்திருக்கும் பின்னர் படிப்படியாக அது குறையத்தொடங்கிவிடும்.